திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், பஞ்சாயத்து யூனியனிலும், முனிசிபாலிட்டிகளிலும் உள்ள கிளார்க்குகள் எல்லாம் பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலமாகத்தான் நியமிக்கப்பட்டு வருகிறார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : கிராம சேவக்குகளுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கவேண்டும், அதற்காகத்தான் இம்மாதிரி தேர்ந் தெடுக்கப்படுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் கிராம சேவக்குகள் விவசாயம் சம்பந்தமாக கடுமையான பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ஆகவே இவர்கள் பஞ்சாயத்து அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால் இவர்கள் பெற்ற பயிற்சி வீணாகப் போய்விடும். ஆகவே இவர்களை பஞ்சாயத்து அதிகாரிகளாகப் போடுவதை விட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி யாகப் போடுவதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கிராம சேவக்குகள் இரண்டு வருடம் பயிற்சி பெறுகிறார்கள். இருந்தாலும் அவர்கள் எட்டு வருஷம் சேவை செய்த பிறகும், அவர்களுக்கு உத்யோக உயர்வு கிடைக்கும் என்ற நிலை இருந்தால்தான் அவர்கள் சந்தோஷமாக உத்யோகத்தில் வேலை செய்து வருவார்கள் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

MR. SPEAKER : The question of the hon. Member is, why the Government should not appoint Gramasevaks as Extension Officers (Agriculture). Is there any qualification prescribed for the Extension Officer (Agriculture) ?

SOME HON. MEMBERS : B.Sc. (Agriculture),

கனம் சபாநாயகர் : இதுதான் அதிலுள்ள கஷ்டமாய் இருக்கும்.

பொது இடங்களில் அதிகாரிகளின் உருவப்படங்கள்

* 435 கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) பொது இடங்களில் அரசாங்க அதிகாரிகளின் உருவப் படங்கள் வைக்கக்கூடாது என்று அரசாங்கம் ஏதேனும் உத்தர விட்டிருக்கின்றதா?

(இ) அப்படியானால், ஒவ்வொரு வாசகசாலையிலும் கல்வி இயக்குனர் அவர்களின் உருவப்படம் வைக்கப்பட்டிருப்பதன் காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) No person or body ever took the permission of the Director at any time to display his portrait or picture in any library or reading room. As stated by the Member, if the portrait or picture of the Director is found in any library or reading room, such display is without the knowledge and permission of the Director

28th March 1964]

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அதிகாரிகளுடைய பிள்ளைகளுடைய படத்தையும் வைக்கக்கூடாது என்பதையும் சர்க்கார் உத்தரவில் சேர்த்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யாருடைய படத்தையும் வைக்க வேண்டிய அவசியமில்லை என்றுதான் சொல்லியிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : துவக்கப் பள்ளிகள் முதல், கல்லூரி வரையிலும் இருக்கின்ற கல்வி நிலையங்களில் எல்லாம் திருவள்ளுவர் படத்தை முறையாக வைக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு உத்தரவு ஒன்றும் வேண்டியதில்லை. எல்லா பள்ளிகளிலும் திருவள்ளுவரை பாராட்டு கிறார்கள். அவர்களே திருவள்ளுவர் படங்களையும் வைத்துக் கொள்ளலாம்.

திரு. செ. மாதவன் : அரசாங்கம் செலவு செய்து கட்டுகின்ற காலனிகளுக்கு அரசாங்க அதிகாரிகளுடைய பெயர்களை வைக் கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது அரசாங்கத்தின் கவனத் திற்கு கொண்டு வரப்படவில்லை. குறிப்பிட்ட ஏதாவது தகவல் இருந்தால் அதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அதிகாரிகளுடைய படங்களை பள்ளிகளிலும் அரசாங்க அலுவலகங்களிலும் வைக்கக்கூடாது என்று இருப்பதுபோல், ஓய்வு பெற்று சம்பளம் வாங்கிக்கொண்டி ருக்கின்ற அதிகாரிகளுடைய படத்தையும் வைக்கக்கூடாது என்று அரசாங்கம் சொல்லியிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓய்வு பெற்ற அதிகாரிகள் படங்கள் வைப்பது சம்பந்தமாக எந்தவிதமான தகவலும் வர வில்லை. பொதுவாக அதிகாரிகளுடைய படம் வைக்கவேண்டாம் என்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணம்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, ஆங்காங்குள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பஞ்சாயத்து தலைவர்களின் படத்தை வைக்கவேண்டும் என்று சொன்னால் அதற்கு சர்க்கார் இடம் கொடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, கவிஞர் பாரதியார் அவர்களுடைய படத்தை எல்லா பஞ்சாயத்து பள்ளிகளிலும் வைத்திருப்பதுபோல், திருவள்ளுவர் படத்தையும் வைக்க வேண்டும் என்று சர்க்கார் உத்தரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சர்க்கார் செலவு செய்து பாரதியார் படத்தை வைக்கவில்லை. பாரதியார் படத்தை

வைக்கலாம். அதுபோல் திருவள்ளுவர் படத்தையும் வைத்துக் கொள்ளலாம். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பாரதியார் வேண்டும், திருவள்ளுவர் வேண்டாம் என்றில்லை. பாரதியாரே திருவள்ளுவரைப் போற்றியிருக்கிறார்.

Polytechnic for girls, Kanyakumari district.

*436 Q.—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to open a Polytechnic for girls in Kanyakumari district during 1964?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

SRI M. WILLIAM : Sir, in view of the growing unemployment among the educated girls, will the Hon. Minister be pleased to consider the matter of opening a polytechnic for girls?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, according to the Third Five-Year Plan, only three polytechnics have to be opened and they have been decided to be established in Madras, Madurai and Coimbatore.

SRI M. WILLIAM : Sir, will he Hon. Minister be pleased to consider the question of opening at least a technical school for girls in one of the places that are lying vacant in the Marthandam Industrial Estate?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I do not know whether any place is lying vacant. In any event, we cannot start industrial schools because a building is vacant.

Pettavathalai Sugar Factory

*437 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) the steps taken by the Government to settle the dispute between the management of Pettavathalai Sugar Factory and the cane-growers resulting in the shortage of supply of cane from 6th November 1963; and

(b) the details of the dispute?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, may I know whether at least the bonus has now been paid to the sugarcane-growers who have supplied sugarcane to the factories?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the main question relates to the dispute which occured last year. If the hon. Member wants information regarding bonus, a separate question will have to be put.

---

[a] Printed as appendix IV on pages 109-110.